Registered as a Newspaper in Ceylon

விலை சதம் 15

# ஈழநாடு

EELA NADU

போன் 389 | National Tamil Daily | தேசிய தினசரி | தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 | யாழ்ப்பாணம் | குரோதி | சித்திரை 17 ஆம் நாள் | துல்ஹஜ் 16 | (29-4-64 | புதன்கிழமை | இதழ் 78

**லங்கா பேணிஷேஸ்**
(வீட்டுத்தளபாட நிலையம்)
**திறப்புவிழா**
யாழ் – மாநகர பிதா
திரு. T. S. துரைராசா அவர்கள்
நிகழும் குரோதிஞு சித்திரைமீ 17-ந் நாள் (29 - 4 - 64) புதன்கிழமை காலை 7-15க்கு மேல் 9-00 மணி வரையுள்ள சுப வேளையில் டி நிலையத்தை திறந்து வைப்பார்கள்.
274, K. K. S. வீதி,
யாழ்ப்பாணம்.

# கல்வி அறிக்கை அமுல் எவ்விதம் பாதிக்கும்?

பாடசாலை புனரமைப்பு திட்டம்:

## யாழ்ப்பாணமே சிறந்த இடமாம்

கொழும்பு, செவ்வாய்

பாடசாலைகள் புனரமைப்புத் திட்டம் அமுலாக்க வேண்டுமானல் அதற்கு உகந்த முதலாவது இடம் யாழ்ப்பாண மாவட்டம் தான் என்று கல்வி இலாகா அதிகாரிகளால் தயாரிக்கப்பட்ட புள்ளிவிபரத்திரட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தப் புள்ளிவிபரத்திரட்டின்படி யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும 88 உயர்தர பாடசாலைகள் உள்ளன என்றும் அவற்றில் 24, 1-ம் தரத்தைச் சேர்ந்தவை மத்ய மகா வித்தியாலயங்கள் 4, மகாவித்தியாலயங்கள் 28, 2-ம் தரத்தைச் சேர்ந்தவை 13, மூன்ருந் தரத்தைச் சேர்ந்தவை 19. என்றும் தெரியவருகிறது.

இலங்கை முழுவதிலும் யாழ்ப்பாண மாவட்டத்திலேதான் முதல்த்தர பாடசாலைகள் எண்ணிக்கையில் பெருமளவில் உள்ளன என்பதை இந்தப் புள்ளிவிபரத்திரட்டு சந்தேகத்துக்கிடமின்றி நிரூபித்துவிட்டது. கொழும்புவடக்கு, கொழும்பு தெற்கு, களுத்துறை மாவட்டங்களைக் கொண்ட மேல் மாகாணத்தில் ஆறேகால் லட்சம் மாணவர் கல்வி பயிலுகின்ருர்கள். அங்கு 21 முதலாம்தரப் பாடசாலைகளும், 10 இரண்டாந்தரப் பாடசாலைகளும், 68 மூன்ருந்தரப் பாடசாலைகளும் 133 மகாவித்தியாலயங்களும் மட்டுமே உள்ளன. ஆனல் யாழ்ப்பாணத்திலோ 148792 மாணவர் மட்டுமே கல்வி பயிலுகின்றனர் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள முதலாந்தர இரண்டாந்தரப் பாடசாலைகளை தரக்குறைவுசெய்வதிலும் ஏனைய பகுதிகளில் உள்ள பாடசாலைகளின் தரத்தை உயர்த்துவது விரும்பத்தக்கது என அந்தப்புள்ளி விபரத்திரட்டு சுட்டிக்காட்டியுள்ளது.

பாடசாலைகள் புனரமைப்புத்திட்டத்தின் நோக்கம், ஆரம்பப் பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதும் அதே சமயத்தில் முதலாந்தர, இரண்டாந்தரப் பாடசாலைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதுமே என்று அறியவருகிறது.

பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்வதன் மூலம் கல்விக்காக அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவு பெருமளவிற் குறைந்துவிடுமென்று கல்விக் கந்தோர் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்,

## கல்விமான்களுடன் தமிழரசு கட்சி ஆலோசனை செய்யும்

யாழ்ப்பாணம், புதன்

**கல்வி வெள்ளை அறிக்கை அமுல் நடத்தப்படும் பொழுது, தமிழ் பேசும் மக்கள் எவ்விதம் பாதிக்கப்படுவார்களென்பதையும் தமிழ் பேசும் மக்களைப் பாதிக்காத வகையில் எவ்வித நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்பதையும் பற்றி பரிசீலனை செய்வதற்கு இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள கல்விமான்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தமிழரசுக் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது.**

கல்வி வெள்ளை அறிக்கை சம்பந்தமாகப் பரிசீலனை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென மன்னரில் சென்ற வார இறுதியில் நடைபெற்ற கட்சியின் குழுக் கூட்டத்தில் ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் தலைமையில் ஒரு உபகுழு நியமிக்கப் பட்டது. மலைநாட்டு மக்களைப் பெரிதும் பாதிக்கக் கூடிய பல அம்சங்கள் இந்த அறிக்கையில் இருப்பதால் மலைநாட்டு மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கும் ஸ்தாபனங்களையும் அழைத்து ஆலோசனை செய்வதென்றும் கல்விமான்களையும் இந்த உபகுழுவில் சேர்த்து கல்வி அறிக்கை பற்றி பூரணமாக ஆராய்வதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கல்வி அறிக்கையை அமுல் செய்வதன் மூலமும் பாடசாலைகளைப் புணரமைப்பதென்ற திட்டத்தின் மூலமும் ஐந்து வருடத்திலிருந்து பத்து வருடகாலத்துக்குள் பத்துலட்சம் தமிழர்களை சுலபமாகச் சிங்களவர்களாக்குவது தான் அரசாங்கத்தின் திட்டம் எனத் தாம் கருதுவதாக திரு. வி. நவரத்தினம் தெரிவித்தார்.

## தமிழர் புறக்கணித்தாலன்றி தமிழ் அழியமாட்டாது

### அரங்கு திறப்புவிழாவில் மட்டக்களப்பு எம். பி. பேச்சு

நல்லூர், புதன்

தனிச் சிங்கள சட்டத்தினுல் தமிழை அழித்துவிடமுடியாது. தமிழ் பேசும் மக்களின் புறக்கணிப்பினுல் மட்டுமே தமிழ் அழிய முடியும் என்று மட்டக்களப்பு எம். பி. திரு. செ. இராஜதுரை பாஷையூர் துறைமுகத் திடலில் அமைக்கப்பட்ட அழகையா முத்தமிழ் அரங்கத்தை திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

நேற்றிரவு யாழ்ப்பாணம் மேயர் திரு. டி. எஸ். துரைராசா தலைமையில் திறப்புவிழா வைபவம் நடைபெற்றது.

திரு. செ. இராஜதுரை தொடர்ந்து பேசியதாவது:- பாரம்பரிய சரித்திர வரலாறுகள் உள்ள நாம் நமது உரிமைகளை இழந்து தவித்துக்கொண்டிருக்கிருேம்.

(6-ம் பக்கம் பார்க்க)

பெட்ரோலிய

## தொழிலாளர் வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது

### யாழ்ப்பாணத்திலும் ஒருபகுதியினர் வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், புதன்

திங்கட்கிழமை கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட பெட்ரோலியம் கார்ப்பரேஷன் தொழிலாளரின் வேலை நிறுத்தம் நேற்றுத் தொடர்ந்து நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் வேலை நிறுத்தம் நேற்று முதலே ஆரம்பிக்கப்பட்டது.

கார்ப்பரேஷனின் யாழ்ப்பாணக் கிளையின் தொழிலாளிகள் 23 பேர்களுள் 18 பேர் வேலை நிறுத்தம் செய்கின்றனர். கொழும்பில் லிகிதர்கள் வேலை நிறுத்தம் செய்துவருகின்றனர். இங்கு லிகிதர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவில்லை என அறியப்படுகிறது. 18 தொழிலாளிகள் வேலைநிறுத்தஞ் செய்வதனுலே ஓரளவிற்கு பெற்ரோல் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட ஒரு காருக்கு ஒரே முறையில் 2 கலன் பெட்ரோல் மட்டும் கொடுக்கின்றனர். ஆனல் பல முறை பெட்ரோல் பெறக்கூடியதாய் இருப்பதால் நிலைமை அவ்வளவில் மக்களைப் பாதிக்கக் கூடியதாயில்லை.

## மோட்டார்சைக்கிள் விபத்தில் இருவர் மரணம்

யாழ்ப்பாணம், செவ்.

சாவகச்சேரி, கச்சாய் வீதியிலுள்ள புகையிரத கடவையில் நேற்றிரவு ஏற்பட்ட விபத்தின் காரணமாக கைதடி நுணுவிலைச் சேர்ந்த ஆசிரியர் சதாசிவமும் கிராம சபை பியோன் பொன்னுத்துரையும் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட சிறிது நேரத்தில் காலமானுர்கள்.

காங்கேசன் துறையிலிருந்து கொழும்புக்கு சமான்கள் ஏற்றிச் சென்ற புகையிரதத்துடன் மோட்டார்சைக்கில்மோதியதாலேயே இவ்விபத்துஏற்பட்டது மோட்டார்சைக்கிளில் சென்றுகொண்டிருந்த சதாசிவமும் பொன்னுத்துரையும் பலத்த காயங்களுடன் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

புகையிரத பாதுகாப்புக் கடவையில்லாத அந்த வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் புகையிரதம் செல்லும்வரை காத்திருந்ததாகவும் மோட்டார் சைக்கிள் இயந்திரம் இயங்கிக்கொண்டிருந்ததால் திடீரென மோட்டார் சைக்கிள் சாய்ந்து புகையிரதத்துடன் மோதியதாவும் அறியப்படுகிறது.

## யாழ்ப்பாணத்தில் மேதின கூட்டங்கள்

யாழ்ப்பாணம், புதன்

மேதின விழாவுக்கான ஏற்பாடுகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வருகின்றன. மொழிவழி பிரிந்த தொழிற் சங்கங்களின் மேதினக் கூட்டம் யாழ்ப்பாண நகரமண்டபத்தில் திரு. கோடீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்திலும் இதற்குமுன் நாச்சிமார் கோவிலடியிலிருந்தும் கச்சேரியடியிலிருந்தும் நகரமண்டபத்தை நோக்கி வரவிருக்கும் ஊர்வலத்திலும் இருபத்தைந்துக்கு மேற்பட்ட தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் அங்கத்தவர்களும் கலந்து கொள்வர். கூட்டத்தில் திரு. அ. அமிர்தலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் ஆகியோரும் பேசுவார்கள் என அறிவிக்கப்படுகிறது.

இடதுசாரி ஐக்கிய முன்னணியின் மேதினக் கூட்டம் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்திலும் இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் கூட்டம் ரெக்ளமேசன் மைதானத்திலும் நடைபெறவிருக்கிறது.

## திருமணம்

அன்புடையீர்! 3-5-64 ஞாயிற்றுக்கிழமை இரவு 11-21 மணியளவில் எங்கள் புத்திரி செல்வி தருமபூபதிக்கும், செல்வன் க. சிதம்பரநாதன் அவர்களுக்கும் மணமகளில்லத்தில் திருமணம் நிகழும். அத்தருணம் உற்ருர், உறவினர், நண்பர்கள் யாவரும் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதித்துச் செல்லுமாறு அன்புடன் வேண்டுகிறேம். தனிப்பட்ட முறையில் அறிவித்தல் இல்லை.

இங்ஙனம், சி. முத்துவேலுவும் பாரியாரும். மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பளை. 267

### மணிவாக்கு

வாழ்க்கையிலே ஒரு இலட்சியமோ, கொள்கையோ இல்லாதவர்களுக்கு மனம் வலுவற்றதாக இருக்கும். மற்றவர் மெச்சுவதற்காக, பொய்க் கௌரவத்துக்காக, பிறரைப் பார்த்து தாங்களும் காரியங்கள் செய்வர்.

— பிஷப் புல்டன் ஷீன்

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Dail, Post Box 49, Jaffna
Telegram. EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு சித்திரை மீ 17ல (29-4-64)

## கூடாத வேலைநிறுத்தம்

வேலைநிறுத்தங்களை பலவற்றைத் தலைமைதாங்கி நடத்திய தொழிற்சங்கத்தலைவரும் அரசியல் தலைவர்களில் ஒருவருமான டாக்டர் என். எம். பெரேரா சில வாரங்களுக்குமுன் ஒரு வைபவத்தில் பேசுகையில் நாட்டின் இன்றைய நிலையில் வேலைநிறுத்தங்களெதிலும் தொழிலாளர் ஈடுபடக்கூடாது என்று அறிவுறுத்தியிருந்தார். அனுபவமிக்க அவரது அறிவுறுத்தலையும் பொருட்படுத்தாது எண்ணெய் கூட்டுஸ்தாபனத்தைச் சேர்ந்த ஆயிரம் தொழிலாளர்கள் திடீர் வேலைநிறுத்தம் செய்துள்ளனர். இதனால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள சங்கடங்கள் கொஞ்சமல்ல.

வேலைநிறுத்தம் இருபுறமும் கூர்மையுள்ள கடைசி ஆயுதம், இதை எடுத்ததெற்கெல்லாம் உபயோகிப்பது ஆபத்தாகும். வேறு பல வழிவகைகளில் முயற்சிசெய்து அந்த முயற்சி வெற்றியளிக்காதுவிட்டால் இறுதி நடவடிக்கையாகவே வேலைநிறுத்தம் செய்யவேண்டும். பொதுமக்களின் ஆதரவும் தொழிலாளர்களின் ஒற்றுமையும் இல்லாமல் எந்த வேலைநிறுத்தமும் வெற்றிபெறமாட்டாது. நியாயமான கோரிக்கைகளுக்காக நடைபெறும் வேலைநிறுத்தத்துக்குத்தான் தொழிலாளரின் ஒற்றுமையும் பொதுமக்களின் ஆதரவும் கிடைக்கும்

நேற்றுமுன்தினம் வேலைநிறுத்தம் ஆரம்பித்துள்ள எண்ணெய்கூட்டு ஸ்தாபனத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரம் தொழிலாளரும் கூட்டுஸ்தாபனத்தின் ஒரு நலவுரிமை அதிகாரியின் இடமாற்றத்தை ஆட்சேபித்தும் அந்த அதிகாரிக்கு கூட்டு ஸ்தாபன நிர்வாகம் பிறப்பித்த உத்தரவுகளை ஆட்சேபித்தும் வேலைநிறுத்தம் செய்வதாக அறிவித்துள்ளனர்.

நலவுரிமை அதிகாரி கூட்டு ஸ்தாபனத்தில் பணியாற்றும் ஒரு ஊழியர். அவரது வேலை என்ன என்பதையும் அவர் செய்யவேண்டிய பணிபற்றி உத்தரவு பிறப்பிப்பதும் கூட்டு ஸ்தாபன நிர்வாகத்திற்கு உரிய பொறுப்பு. அவரை இடமாற்றம் செய்வதும் ஸ்தாபனத்துக்கு உள்ள உரிமை. இடமாற்றமோ இதர உத்தரவுகளோ நியாயமற்றவையாக இருப்பின் அதற்கு அந்த அதிகாரியோ தொழிலாளர்களோ தனிப்பட்ட முறையில் அல்லது தொழிற்சங்க ரீதியில் முறைப்படி ஆட்சேபம் தெரிவிக்கலாம். இடமாற்றம் மற்றும் உத்தரவுகள் நியாயமற்றவையென்பதை ஸ்தாபனத்தின் நிர்வாகிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி சுமுகமான முறையில் தீர்வு காண வழி செய்யலாம். இதுதான் சரியான முறை. இதை விடுத்து திடீர் வேலைநிறுத்தம் செய்வது ஸ்தாபனத்துக்கு மட்டுமல்ல தொழிலாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் பாதகமாகும்.

நாட்டின் பொருளாதார நிலை மோசமடைந்து பொதுமக்கள் வாழ்க்கைச் செலவு உயர்வைச் சமாளிக்க முடியாமல் கஷ்டப்படும் இச்சமயத்தில் எந்த வேலைநிறுத்தத்தையும் அவர்கள் ஆதரிக்கமாட்டார்கள். எண்ணெய் தொழிலாளர்களின் இந்த வேலைநிறுத்தத்துக்கு அரசியல் பின்னணியெதுவும் இல்லையென்று கூற முடியாது. எது எப்படியிருப்பினும் இந்த வேலைநிறுத்தம் தொழிலாளர்களுக்கிடையில் பிளவை ஏற்படுத்துவதுடன் பொதுமக்களுக்கும் கஷ்டம் உண்டாக்குவதாகும். நாட்டினதும் பொதுமக்களினதும் நன்மையைக் கருதி வேலைநிறுத்தம் செய்வோர் வேலைநிறுத்தத்தை உடன் கைவிட்டு வேலைக்குத் திரும்புவதே நல்லது. தங்கள் குறைகளை, பொதுமக்களைப் பாதிக்காத முறையில் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்வதே விவேகமாகும்.

# படித்த வாலிபருக்கு காணித் துண்டுகள்

## மே 11-க்குமுன் விண்ணப்பிக்க வேண்டும்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்டத்தில் நிரந்தரமாக வசிக்கும் வேலையில்லாத படித்த வலிபர்களுக்கு கண்டிய தேவன்குளம் ஆனைவிழுந்தான் குளம், ஆகிய குடியேற்றத்திட்டங்களில் காணித் துண்டுகளை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விண்ணப்பம் செய்பவர்கள் சிரேஷ்ட அல்லது பொதுத் தராதரப் பத்திரங்கள் அல்லது கூடிய தராதரப்பத்திரங்கள் பெற்றவர்களாக இருக்க வேண்டும். வயது 18—24.

விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை மே மாதம் 11-ம் திகதிக்கு முன்னதாக பதிவுசெய்யப்பட்ட தபாலில் யாழ்ப்பாணமாவட்ட அரசாங்க அதிபருக்குஅனுப்ப வேண்டும்.

காணி கோருவதற்கான விண்ணப்பப்பத்திரங்கள்வழங்கப்படமாட்டாது. விண்ணப்பம் அனுப்புவோர் கீழ்க் காணும் மாதிரிப் பத்திரத்தில் தாங்களே எழுதி அனுப்ப வேண்டும்.

விண்ணப்பதாரரின் பெயர், வயது, வசிக்கும் கிராமம், காரியாதிகாரியின் பிரிவும் கிராமத் தலைமைக்காரரின் பகுதியும், தபால்விலாசம், கிராமத்தில் வசித்த காலம், வித்தியாசாலை அல்லது வேறு கல்விகற்கும் நிலையங்களிலிருந்து விலகிய திகதி, வேலையில்லாமல் இருந்த காலம், தனது பெயரிலுள்ள காணிகள் அல்லது உரிமையாகப் பெறக்கூடிய காணிகளின் விபரம், கல்வித் தராதரம், விவசாய அனுபவம், விவசாய பாடசாலையில் உள்ள அனுபவம் (தராதரப்பத்திரம் பெற்றவரா என்பதை எழுத வேண்டும்) ஐக்கிய சங்கப் பயிற்சியில் தேர்ச்சிபெற்றபத்திரம்—இருந்தால், விண்ணப்பதாரருக்குரிய சகோதர சகோதரிகள்—வயதுடன்.

விவசாயப் பாடசாலையில் பெற்ற அத்தாட்சிப்பத்திரம் ஐக்கிய சங்கப் பயிற்சியில் தேர்ச்சிபெற்ற பத்திரம் ஆகியவற்றின் பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இப்பத்திரங்களின் மூலப்பிரதிகள் காணிக்கச்சேரியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். தெரிவு செய்யப்படுபவர்கள் 1964-ம் ஆண்டு ஜூலை மாதம் அரசாங்கத்தால் வழங்கப்படும். பொது வாடிகளில் வசிக்கும்படி கோரப்படுவர். ஒவ்வொரு குடியேற்றவாசிக்கும் இரண்டு ஏக்கர் வயல் நிலமும் ஐந்து ஏக்கர்வரைக்கானமேட்டுக் காணியும் வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு உதவிப்பணம் கொடுக்கப்படும்.

காணிக்கச்சேரிக்கு விண்ணப்பதாரர்கள் சமுகமளிக்க வேண்டும். காணிக் கச்சேரி நடைபெறும் பகுதி, இடம், திகதி முதலிய விபரங்கள் வருமாறு:

தீவு: ஊர்காவற்றுறை வாடிவீடு—காலை 9-00-மே 27; யாழ்ப்பாணம்: யாழ்: காரியாதிகாரி காரியாலயம் காலை 9-00-மே 22; வலிகிழக்கு: கோப்பாய் காரியாதிகாரி காரியாலயம்—காலை 9-00-மே 28; வடமராட்சி: பருத்தித்துறை காரியாதிகாரி காரியாலயம் காலை 9-00-ஜூன் 1; தென்மராட்சி: சாவகச்சேரி காரியாதிகாரி காரியாலயம் காலை 9-00-ஜூன் 5; வலிவடக்கு: தெல்லிப்பளை காரியாதிகாரி காரியாலயம் காலை 9-00- ஜூன் 3; பூநகரி: பூநகரி காரியாதிகாரி காரியாலயம் காலை 9-00-மே 21; வலிமேற்கு சங்கானைகாரியாதிகாரி காரியாலயம் காலை 9-00-ஜூன் 4; பளை: பளை காரியாதிகாரி காரியாலயம் காலை 9-00-மே 20; நெடுந்தீவு: நெடுந்தீவுகாரியாதிகாரி காரியாலயம் காலை 9-00-ஜூன் 18; கரைச்சி: கிளிநொச்சி காரியாதிகாரி காரியாலயம் காலை 9-00-ஜூன் 2; துணுக்காய்: துணுக்காய் காரியாதிகாரி காரியாலயம் காலை 9-00-ஜூன் 8

காணிக் கச்சேரியில் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள், அவ்விடத்திலோ அல்லது கடிதமூலமாகவோ காணிக் கச்சேரி நடைபெற்ற திகதியிலிருந்து மூன்று வாரங்களுக்குள் தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுவர். தேர்ந்தெடுக்கப்பட்டோர் அவரது காணித் துண்டுகள் கொடுக்கப்படும் நாளில் சமுகமளிக்கத் தவறினால் அவரது பெயர் தேர்ந்தெடுக்கப்பட்டோரின் இடாப்பிலிருந்து நீக்கப்படும். இதன் மூலம் இவர் வேறு காணித்துண்டுகள்பெறுவதற்கு உரிமையற்றவராகி விடுவர்.

விண்ணப்பம் செய்பவர்கள் விவசாய பாடசாலைகள் அல்லது ஐக்கிய சங்கத்தில் தேர்ச்சி பெற்ற பத்திரங்கள் வைத்திருந்தால் அவர்களுக்கு விசேஷ சலுகைகள் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் அனுப்பப்படும் மேலுறையின் இடது கோணத்தில் "வேலையில்லா வாலிபர் குடியேற்றத் திட்டத்தில் காணி கோரும் விண்ணப்பம்" என்று அனுப்பாமல் வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது:

# மட்டக்களப்பில் நடைபெறும் மே தின விழாக்கள்

மட்டக்களப்பு, செவ்வாய்

மட்டக்களப்பில் பல்வேறு சங்கங்களின் ஆதரவில் தனித்தனியாக மேதின விழாக்கள் நடைபெறவிருக்கின்றன. இடதுசாரி ஐக்கிய மேதின விழா, மொழிவழித் தொழிற் சங்கங்களின் மேதின விழா, தேசிய தொழிலாளர் சங்கங்களின் மேதினவிழா ஆகியன இவற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தனவாக அமையும்.

### மொழிவழி தொழிற் சங்க விழா

மொழிவழித் தொழிற் சங்கங்களின் ஆதரவில் மட்டக்களப்பு மார்க்கட் மைதானத்தில் நடைபெறவிருக்கும் மேதினக் கூட்டத்திற்கு அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு மு. நல்லதம்பி தலைமைதாங்குகிறார். அரசாங்க அரிசி ஆலைச் சந்தியிலிருந்து நூற்றுக்கணக்கான தமிழ் ஊழியர்களைக் கொண்ட ஊர்வலம் ஆரம்பமாகி, மட்டுநகர் பிரதான வீதிகளுக்கூடாக மட்டுநகர் முற்றவெளியை அடைந்து மீண்டும் ஊர்வலம் மார்க்கட் மைதானத்தை அடைந்ததும் கூட்டம் ஆரம்பமாகும்.

இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் நிர்வாக உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் தலைவருமான திரு. எஸ். எம். இராசமாணிக்கம், தமிழாசிரியர் சங்கத்தைச் சேர்ந்த திரு. டி. எஸ். கே. வணசிங்கா ஆகியோர் உட்பட, அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், துறைமுக நாவாய் இயக்குநர் சங்கம், அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம், அரசாங்க கூட்டு ஸ்தாபன ஊழியர் சங்கம், மருவிய எழுதுவினைஞர் சங்கம் தொழிலாளர் பாதுகாப்பு முன்னணி, நெல் அரிசி அளவைத் தொழிலாளர் சங்கம் ஆகிய பல்வேறு சங்கங்களின் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் உரைநிகழ்த்துவர்.

### இடதுசாரி ஐக்கிய முன்னணி

இடதுசாரி ஐக்கிய முன்னணியின் ஆதரவில், மட்டக்களப்பு மைதானத்தில் வெள்ளிக்கிழமை மாலை மேதினக் கூட்டம் நடைபெறவிருக்கிறது. இவ்விழா கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய கட்சிகளின் ஆதரவில் நடைபெறும். விழாவிற்கு திரு. கே. ஓ. வி. சதிர்காமத்தம்பி தலைமை தாங்குவார். பிரஸ்தாப மேதினவிழாக் குழுவினர் மேதினத்தன்று பல போட்டிகளை நடத்த ஒழுங்குகள் செய்துள்ளனர்.

### தேசிய தொழிலாளர் சங்க விழா

தேசிய தொழிலாளர் சங்கத்தின் ஆதரவில் நடைபெறவிருக்கும் மேதினக் கூட்டம் கத்தோலிக்க மக்களால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. தாண்டவன்வெளி-பரி-காணிக்கை மாதா தேவாலய வளவில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் பல பிரமுகர்களின் கருத்துரைகளும், இசைவிருந்து, நடனவிருந்து முதலிய பல கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவிருக்கின்றன.

### சுன்னாகத்தில்

சுன்னாகம் அர்ச். அந்தோனியார் கழகத்தின் சார்பில் கோவில் முன்றிலில், மே தினத்தை முன்னிட்டு அன்று காலை கட்டளைக்குரவர் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும். இக் கூட்டத்தில் திரு. ஆசீர்வாதம் வின்செஸ்லேஸ், திரு. ப. அமலதாஸ். திரு. கு. செபமாலை திரு. செ. கீர்தபுங்களம, திரு. அருட்பிரகாசம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவார்கள்.

## ஐயாறன் எழுதுவது

முதல்முதலாக யாழ்ப்பாணத்தின் தலையிலே கைவைப்பதென்று கல்வி அதிகாரிகள் உத்தேசித்திருப்பதாக ஒரு செய்தியைப் பார்த்தேன். அவர்கள கடாட்சம் இந்தப்பக்கம் திரும்புவானேன் என்று அந்தச்செய்தியை ஊன்றிப்படித்தேன்.

பள்ளிக்கூடங்களைத் திருத்தி அமைக்கவேண்டுமென்று "வெள்ளை அறிக்கை" கூறியிருப்பதாயும், அந்த வேலையை முதல்முதலாக யாழ்ப்பாணத்தில்தான் ஆரம்பிக்கவேண்டுமென்றும் ஏனெனில் மற்ற இடங்களை விட இங்குதான் முதல்தரமான பள்ளிக்கூடங்கள் அதிகம் இருப்பதாகவும் அவர்கள் காரணம் கூறியிருக்கின்றார்கள்.

உண்மையாகச் சொல்லுகிறேன், இந்த வெள்ளை அறிக்கை. கல்விக்கமிஷன் அறிக்கை முதலியவை எனக்குப் புரிவதில்லை. ஆகவே அனுபவமிக்க ஓர் ஆசிரியரை இதைப் பற்றி விசாரித்தேன். யாழ்ப்பாணத்திலே நல்ல கல்லூரிகள் இருப்பதைக்கண்டு தெற்கிலுள்ளவர்களுக்குப் பொறாமையாம். இதையெல்லாம் கெடுக்கத்தான் இங்கு முதலில் கைவைக்கப் பார்க்கிறார்களாம்.

"வெள்ளை அறிக்கையைப் பற்றி பார்லிமெண்ட் சபையிலே இன்னும் பரிசீலனை நடக்கவில்லை. பார்லிமெண்ட் கூடினாலும், அது படஜட் முதலியவற்றைப் பற்றித்தான் யோசிக்கமுடியும். ஆகவே இந்த முக்கிய விஷயத்தில், பார்லிமெண்டின் அனுமதி இன்றியே நிர்வாக நடவடிக்கை மூலம், பாரதூரமானநடவடிக்கைகளை எடுத்து இங்கு கல்வி ஸ்தாபனங்களைச் சீர்குலைக்கப்பார்க்கின்றனர். இங்கு எந்தக் கல்லூரியிலும் இந்தப் புதிய முறையைக் கொண்டுவந்தால், மாணவர்களைப் பெரிதும் பாதிக்கும்" என்றார் அவர்.

பெரும்பாலான மாணவர்களை மேல்படிப்புப் படிக்கத் தகுதியில்லை என்று தள்ளி, தெருவில் தவிக்க விடுவதே இந்த வெள்ளை அறிக்கையால் ஏற்படக்கூடிய விளைவென்றும், அவ்விதம் தள்ளப்படும் வாலிபர்கள் வாழ்க்கை குட்டிச்சுவராகுமென்றும் அவர்களுக்குத் தகுந்த தொழில் முதலிய கல்வியை அளிக்க எவ்வித ஏற்பாடும் செய்யாமல், வெள்ளை அறிக்கையை அமுல் நடத்த முற்படுவது, அவர்களுக்குச் செய்யும் பெரும் பாவமும் துரோகமுமாகுமென்றும், இங்குள்ள பொதுமக்களும், பெற்றோர்களும் விழித்திருந்து, இந்த முயற்சியைப் பலமாக எதிர்க்கவேண்டுமென்றும் உணர்ச்சியுடன் கூறினர் அந்த ஆசிரியர்.

'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார்கோவில்ஆண்டி' என்று கதையுண்டு அதனால்தான் யாழ்ப்பாணத்தின் தலையிலே முதலில் கைவைக்கப் பார்க்கிறார்கள்போலும்!

* * *

"கிராமராஜ்யம்" என்னும் பத்திரிகையில வினோபா அடிகள் எழுதுவதாவது:-

"பழைய அரசாங்கம் அகற்றப்பட்டு புதிய அரசாங்கம் ஏற்பட்டபோது நாம் பழைய யூனியன் ஜாக்கொடியை இறக்கிவிட்டு நமது புதிய சுதந்திரக்கொடியை உயர்த்தினோம். அதுபோல் பழைய அடிமைக் கல்வியை அகற்றிவிட்டு புதிய சுதந்திரக் கல்வியைப் புகுத்தத் தவறிவிட்டோம். ஆகவே இன்று நமது சுதந்தர ஆட்சி என்பது வெறும் மேற்பூச்சே தவிர உண்மையில் நடப்பது பழைய ஆட்சியே" என்கிறார். அவர் இந்தியாவுக்குக் கூறுவது நம் இலங்கைக்கும்பொருந்தும்.

இந்தக் கல்வியைப் படித்துப் பட்டம் பெற்றாலும் வேலை

(6-ம் பக்கம் பார்க்க)

# ஹிந்தி எதிர்ப்பு கிளர்ச்சியை தி. மு. க. கைவிடும்

சென்னை, ஏப். 28

தி. மு. க. தலைவர் திரு. சி. என். அண்ணாதுரை ஜூன் மாதம் சிறையிலிருந்து விடுதலையானதும் தனது ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை திராவிட முன்னேற்றக்கழகம் நிபந்தனையின்றிக் கைவிடக்கூடும் என விஷயமறிந்த கட்சி வட்டாரங்கள் கூறின.

சிறையில் தம்மைச் சந்தித்த கட்சி நண்பர்களிடம் இதை திரு. அண்ணாதுரை தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

ஹிந்தி திணிப்பின் தீமைகளை மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதில் கிளர்ச்சி ஏற்கனவே வெற்றி பெற்றுவிட்டதாயும் இதை "டில்லியிலுள்ள சக்திகள்" கவனத்தில் எடுத்துக் கொண்டுவிட்டதாயும், எனவே கிளர்ச்சியை நீடிப்பது அவசியமில்லை என்றும் திரு அண்ணாதுரை கருதுவதாகக் கூறப்படுகிறது.

## "தென்னாட்டில் ஹிந்தி சமஸ்கிருதம் மீது துவேஷம்"

— சாஸ்திரி

புதுடில்லி, ஏப். 28

சமஸ்கிருத மொழிக்கு ஆதரவாக சென்னை மக்களின் கருத்தைத் திருப்புமாறு சமஸ்கிருத ஆதரவாளர்களை மந்திரி லால் பகதூர் சாஸ்திரி கேட்டுக் கொண்டார்.

அகிலபாரத சமஸ்கிருத சாகித்திய சம்மேளனத்தின் வருடாந்தக் கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் ஹிந்தி, சமஸ்கிருத மொழியின் மீது தென்னிந்தியாவில் துவேஷம் அதிகரித்திருப்பதாகக் கூறி அவர் கவலை தெரிவித்தார்.

சமஸ்கிருத போதனைக்கும் ஆராய்ச்சிக்கும் மேலும் நிலயங்களைத் திறக்கும் சம்மேளனத்தின் யோசனையை வரவேற்றுப் பேசிய திரு. சாஸ்திரி, ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், குஜராத், மேற்கு வங்காளம் ஆகிய 4 இடங்களிலும் நான்கு சர்வகலாசாலைகளைத் திறப்பது அவசியம் என்றார்.

---

## 18—வது திருத்த மசோதா வாபஸாகும்

புதுடில்லி, ஏப். 28

நேற்று பார்லிமெண்ட் காங்கிரஸ் கட்சியின் நிர்வாகக் கமிட்டி அரசியல்சட்ட 18வது திருத்த மசோதாபற்றி விவாதித்தது. சட்டமந்திரி திரு. ஏ. கே. சென், கல்விமந்திரி திரு. சக்ளா உள்ளிட்டுப்பலர் கலந்து கொண்டனர். இச்சமயத்தில் மசோதாவைக் கொண்டுவரக் கூடாது என அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டதாய்க் கூறப்படுகிறது. கூட்டத்திற்குப் பிரதமர் நேரு தலைமை வகித்தார். கமிட்டி இன்று மீண்டும் கூடும்போது மசோதாவை வாபஸ் பெறுவதுபற்றி ஆலோசிக்கப்படும் எனத் தெரிகிறது.

---

## சீனர்கள் ரோந்து

புதுடில்லி, ஏப். 28

காஷ்மீரில் யுத்தநிறுத்த எல்லைக்கோட்டிற்கு விஜயம்செய்த ஐ. நா. உதவிக் காரியதரிசி டாக்டர் பஞ்ச், பாகிஸ்தானியரின் அத்துமீறல் நடத்தையைத் தடுக்க ஏற்பாடு செய்வார் என நம்புவதாய் பாதுகாப்புமந்திரி திரு. சாவன் கூறினார்.

கோடைக்காலம் துவங்கியதும் சீனர்கள் எல்லையில் ரோந்து சுற்ற ஆரம்பித்திருக்கிறார்கள் என்றும் பாதுகாப்புககாக ஐந்தாண்டுத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருப்பதாயும் அவர் மேலும் கூறினார்.

---

## 'காஷ்மீர் இந்தியாவின் பகுதியே'

-இந்திரா

வாஷிங்டன், ஏப். 28

காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியே என்றும் இதனை பாதுகாக்க இந்தியா முயற்சி மேற்கொள்ள உரிமை இருக்கிறதென்றும் திருமதி இந்திரா காந்தி அமெரிக்காவில் டெலிவிஷன் போட்டி யொன்றில் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவில் டெலிவிஷன்

புதுடில்லி, ஏப். 28

இந்தியாவில் டெலிவிஷன் அமைக்கும் திட்டம் ஆலோசிக்கப்பட்டுவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டெலிவிஷன் வசதிகள் இருந்தால் நாட்டின் முன்னேற்றம் துரிதப்படுத்தப்படுமென அரசாங்க வட்டாரங்கள் கருதுவதாக அறியப்படுகிறது.

---

## பாக்,—சீன ஜெட்விமான சேவை

காராச்சி, ஏப். 28

பாகிஸ்தானுக்கும் சீனாவுக்குமிடையிலான ஜெட் விமான போக்குவரத்துசேவை அடுத்த மாதம் 2-ம் திகதி முதல் ஆரம்பமாகுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## கென்னடி சமாதிக்கு இந்திரா விஜயம்

வாஷிங்டன், ஏப். 28

காலஞ்சென்ற அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் கல்லறைக்கு ஸ்ரீமதி இந்திரா காந்தி விஜயம் செய்து, மலர் வளையம் ஒன்றை வைத்தார். ஸ்ரீமதி கென்னடியையும் அவர் சந்திப்பார்.

---

## மதுரையில் சித்திரா பௌர்ணமி

மதுரை, ஏப். 28

ஸ்ரீ கள்ளழகர் குதிரை வாகனத்தில் வைகை ஆற்றில் இறங்கிய திருக்கோலத்தை சுமார் 2 லட்சம் மக்கள் தரிசித்தார்கள்.

சித்திரா பௌர்ணமியன்று இத்திருவிழாவுக்காக ஸ்ரீகள்ளழகர் திருமாலிருஞ்சோலைமலையெனும் அழகர் கோவிலிலிருந்து எழுந்தருளுவது வழக்கம். எம்பெருமானைச் சேவிக்க பதின்மூன்று மைல் நெடுக மக்கள் குழுமி வருவதும், கிராமங்களில் நடக்கும் மண்டபப்படிகளும், மதுரைநகர் எல்லையில் பட்டணப் பிரவேசமும் கண்கொள்ளாக் காட்சிகளாகும்.

---

## என். எஸ். கிருஷ்ணன் புதல்விக்கு திருமணம்

சென்னை, ஏப். 28

காலஞ்சென்ற நகைச்சுவை நடிகர் திரு. என். எஸ். கிருஷ்ணனின் புதல்வி வடிவாம்பாளுக்கும் என்ஜினியரான ஸ்ரீ வரதராஜனுக்கும் தேனும்பேட்டை "ஆபட்ஸ்டரி"யில் திருமணம் நடைபெற்றது.

ஓய்வுபெற்ற ஹைகோர்ட் நீதிபதி திரு. என். சோமசுந்தரம் வைபவத்திற்குத் தலைமைவகித்தார். ராஜாஜி நேரில் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினார்.

திரு. நெடுஞ்செழியன், திரு. ம. பொ. சிவஞானக்கிராமணியார், டாக்டர் மு. வரதராஜனார், ஸ்ரீமதி சௌந்தரம் கைலாசம் ஆகியோரும் மணமக்களை வாழ்த்திப் பேசினர். பிரபல நடிகர்களும், நடிகைகளும்திருமணத்திற்கு வந்திருந்தனர்.

## தமிழ் நாடு வரும் கி. பாக். அகதிகள்

புதுடில்லி, ஏப்ரல் 28

கிழக்குப் பாகிஸ்தான் அகதிகளில் 200 குடும்பங்கள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் கோயமுத்தூரில் குடியேறும். தமிழ் நாடு 1000 குடும்பங்களை குடியமர்த்த ஒப்புக்கொண்டிருக்கிறது.

---

## ஐக்கிய குடியரசு

தாருல்-எஸ்-ஸலாம், ஏப்ரல் 28

தங்கனிகா அதிபர் ஜூலியஸ் நியாரேயும், ஸான்ஸிபார் அதிபர் கருமேயும் பரஸ்பரம் தஸ்தாவேஜுகளைப் பரிமாறிக் கொண்டவுடன் இணைப்பு ஏற்பாடுகள் பூர்த்தியாயின. ஐக்கிய குடியரசின் மந்திரி சபையில் ஸான்ஸிபாரைச் சேர்ந்த 5 மந்திரிகள் நியமிக்கப்பட்டிருக்கின்றனர். விரைவில் அரசியல் அமைப்புச் சட்டம் ஒன்று தயாரிக்கப்படும்.

---

## தென்னாபிரிக்கா

நியுயோர்க், ஏப்ரல் 28

தென்னாபிரிக்க இன ஒதுக்கல் பற்றி நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படி 58 ஆசிய ஆபிரிக்க நாடுகள் யுதாண்ட்டுக்கு விண்ணப்பித்திருக்கின்றன.

---

## பிலிப்பைன்சும் மலேஷியாவும்

மணிலா, ஏப்ரல் 28

பிலிப்பைன்சும் மலேஷியாவும் இன்னும் ஒரு வாரத்திற்குள் ராஜதந்திரத் தொடர்பு வைத்துக் கொள்ளுமென அறிவிக்கப்படுகிறது.

---

## ஸ்ரீமதி இந்திரா

வாஷிங்டன், ஏப்ரல் 28

ஸ்ரீமதி இந்திரா காந்தி நேற்று ஜனாதிபதி ஜோன்ஸனைச் சந்தித்து நேருவின் செய்தி ஒன்றைக் கையளித்தார். அப்போது வாஷிங்டனிலுள்ள இந்தியத்தூதர் திரு. பி. கே. நேருவும் உடனிருந்தார்.

---

## கார் விபத்தில் அப்பாத்துரை

சென்னை, ஏப்ரல், 28

பன்மொழிப் புலவர் ஸ்ரீ க. அப்பாத்துரை கார் விபத்து ஒன்றில் கடுமையாகக் காயமடைந்தார். அவர் சென்ற காரும் பஸ் ஒன்றும் மோதிக் கொண்டன. திரு. அப்பாத்துரை ஜெனரல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

---

## குருஷ்சேவ் நவீன டிராட்ஸ்கி

பீக்கிங், ஏப். 28

ஸ்டாலினைத் தாக்குவதன் மூலம் திரு. குருஷ்சேவ் டிராட்ஸ்கியின் பல்லவியைப் பாடி வருகிறார் என சீன கம்யூனிஸ்ட் பத்திரிகை "பீப்பிள்ஸ் டெயிலி" தனது ஆசிரியர் தலையங்கத்தில் கூறியிருக்கிறது.

---

## பிரிட்டிஷ் எம். பி. மரணம்

லண்டன், ஏப். 28

கன்சர்வேட்டிவ் எம்.பி. யும், நூலாசிரியரும், பத்திரிகை எழுத்தாளருமான சர் பெவர்லி பாக்ஸ்டர் தமது 73-வது வயதில் காலமானர். "டெயிலி எக்ஸ்பிரஸ்" பத்திரிகையின் பிரதம ஆசிரியராகவும் இவர் கடமையாற்றினர்.

சதிவழக்கு

# எதிர்தரப்பு வழக்கறிஞர்கள் தெரிவித்த ஆட்சேபம்

பாதுகாப்பு சபை

## மே 5-ந் திகதி காஷ்மீர் விவாதம்

புதுடில்லி, ஏப்ரல் 28

காஷ்மீர் பற்றிய பந்தோபஸ்து சபை விவாதத்தில் கலந்துகொள்வதற்காக கல்வி மந்திரி திரு. சக்ளா மே 1-ந் திகதி நியுயோர்க் பயணமாவார். பம்பாயில் ஒரு நாள் தங்கியபின் 2-ந் திகதி அங்கிருந்து புறப்பட்டு 3-ம் திகதி நியுயோர்க் சேருவார். மே 5-ம் திகதி காஷ்மீர் விவாதம் ஆரம்பமாகும்.

---

## இதுவரை 58 பேர் கைது

புதுடில்லி, ஏப்ரல் 28

பூட்டான் பிரதமர் கொலையைத் தொடர்ந்து இதுவரை 58 பேர்கள் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். விசேஷ நீதிமன்றம் ஒன்று இவர்களை விசாரணை செய்யும்.

---

## 'வரி கொடாதவர்களுக்கு வேலி போடுவோம்'

—டி.டி.கே.

புதுடில்லி, ஏப்ரல் 28

நேர்மையான மக்களுக்கு நன்மை செய்வதும், வரி கொடாமல் ஏமாற்றுபவர்களை தடுப்பதுமே பட்ஜட்டின் நோக்கம் என நிதிமந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறினார்.

ராஜ்ய சபா நேற்று நிதி மசோதாவை அங்கீகரித்து அதற்கு முன்பேசிய டி. டி. கே. வரி கொடாமல் ஏமாற்றுபவர்களைச் சுற்றி வேலிபோடும் நோக்கத்தை பட்ஜட் கொண்டிருப்பதாய்க் கூறினார்.

---

## 114 பகைநாகர் சரணாகதி

கொஹிமா, ஏப்ரல் 28

சென்ற சனிக்கிழமை 114 பகைநாகர்கள் அதிகாரிகளிடம் சரணடைந்தனர் என்றும் தங்களை அதிகாரிகள் என்று கூறிக்கொண்ட 8பேரும் இதில் இருந்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது. அவர்களிடமிருந்து 28 துப்பாக்கிகள். இரட்டைக் குழல் துப்பாக்கி, 1ஸ்டென் துப்பாக்கி, 329 சுற்று வெடிகள் ஆகியனவும் கைப்பற்றப்பட்டன.

---

## கோடைப் பள்ளி

திருவானந்தபுரம், ஏப். 22

மொழி இயல் கோடைக் காலப்பள்ளி ஒன்றை கேரள கவர்னர் திரு. கிரி இங்கு துவக்கிவைத்தார். இது 40 நாட்கள் நடைபெறும்.

---

## முந்திரி மும்மடங்காகும்

பங்களூர், ஏப்ரல் 28

மைசூரில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் முந்திரி உற்பத்தி மும்மடங்கு அதிகரிக்கப்படவிருக்கிறது.

## மாதர்கள் கண்டனம்

கல்கத்தா, ஏப்ரல் 28

கிழக்கு பாகிஸ்தானில் சிறுபான்மையினர் கொடுமைப்படுத்தப்படுவது குறித்து உலக மாதர்கள் கண்டனம் தெரிவிக்கவேண்டுமென மேற்கு வங்காள மாதர்கள் மகாநாடு ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. உத்தரபிரதேச முதன் மந்திரி ஸ்ரீமதி சுஜேதா கிருபாளினி மகாநாட்டிற்குத் தலைமைவகித்தார்.

---

## மாட்ரிட்டில் வசிப்பர்

ரோமாபுரி, ஏப்ரல் 28

ஹாலந்து இளவரசி ஐரீனும் அவரது கணவரும் தங்கள் தேன்மதிக்குப்பின் மாட்ரிட்டில் வசிப்பார்கள் என அறிவிக்கப்படுகிறது.

கொழும்பு, செவ்வாய்

புரட்சிச்சதி வழக்கில் எதிர்தரப்பு சிரேஷ்ட வழக்கறிஞர்களான திருவாளர்கள்: ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ ஸியும், ஏ. எச். சி.டி. சில்வா கியூ ஸி.யும் காலஞ்சென்ற உதவிப் பொலிஸ் சுப்பிரீண்டன் திரு. சி. ஓ. ஓரினுடைய வாக்குமூலத்தை எதிரிகளுக்கு எதிராக உபயோகிப்பதை தாங்களிருவரும் எதிர்க்கப் போவதாக நேற்றைய தினம் புரட்சிச் சதிவழக்கு ஆரம்பமானபோது நீதியரசர்களுக்குத் தெரிவித்தனர்.

விசாரணை ஆரம்பமானபோது அட்டோர்ணி ஜெனரல் டக்ளஸ் ஜான்ஸ் கியூ ஸி., எதிர்வரும் திங்கட்கிழமை இருபத்தொராவது எதிரி திரு. வி. இ. பெரேராவின் கடிதமொன்றை விசாரணையில் உபயோகிக்கலாமா, கூடாதா என்பதை விவாதித்துத் தீர்மானித்த பின்னர் ஓரின் வாக்குமூலத்தின் மீது சாட்சியங்களை அழைக்கவிருப்பதாகக் கூறியபோதே எதிரி தரப்பு வழக்கறிஞர்கள் தமது ஆட்சேபத்தைத் தெரிவித்தனர்.

பின்னர் ஓரின் வாக்கு மூலத்தை அனுமதிப்பது பற்றிய பிரச்னையை எதிர்வரும் திங்கட்கிழமை விவாதித்த பின்னரே இது பற்றி முடிவு செய்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

8-வது எதிரி திரு. பி. ஐ. லொயலாவும், 23-வது எதிரி திரு. எஸ். ஜி. ஜாக்ஸனும், சுகவீனம் காரணமாக நேற்று கோர்ட்டுக்கு வரவில்லை.

### சப்-இன்ஸ்பெக்டர் சாட்சியம்

"நள்ளிரவு ஒருமணிக்கு ஆயுதம் தாங்கிய நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்களுடனும், இன்ஸ்பெக்டர் பொன்னையாவுடனும், காலி நோக்கிச்சென்றேன என்று புரட்சிச்சதி வழக்கில் நேற்றுக்காலை சாட்சியமளித்த சப்-இன்ஸ்பெக்டர் எச். சி. ஏ. பெரேரா கூறினார்.

சாட்சியமளிக்கும் போது திரு. பெரேரா தொடர்ந்து கூறியதாவது -

1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் நான் பொட்டலையில் கடமையாற்றினேன். பாராளுமன்ற அங்கத்தவர் திரு.நீல்டி' அல்விசை எனக்கு அப்பொழுது எனக்குத் தெரியும். ஜனவரி 27-ம் திகதி இரவு பத்தேகம பொலிஸ் இன்ஸ்பெக்டர் என் பங்களாவிற்கு வந்தார். கொழும்பு பொலிஸ் சுப்ரீண்டனிடம் இருந்து ஏதாவது தகவல் கிடைத்துள்ளதா என்று என்னிடம் கேட்டார். காலிக்கு எங்களுடன் வந்த ஒவ்வொரு பொலிசுக்கும், துப்பாக்கி வழங்கப்பட்டது. நான் ஒரு கைத்துப்பாக்கியையும் இருபது தடவை வெடிக்கக்கூடிய தோட்டாக்களையும் எடுத்துச் சென்றேன்.

(4-ம் பக்கம் பார்க்க)

## "காஷ்மீரில் தேர்தல் நடத்துக"

மஸானி பரிகாரம்

ராஜ்கோட், ஏப்ரல் 28

ஷேக் அப்துல்லாவின் விடுதலைக்குப் பின் ஏற்பட்ட நிலைமையை ஆராய்ந்தபின், தேர்தல் ஒன்றை நடத்துவதே காஷ்மீர் பிரச்னையைத் தீர்ப்பதற்கான சிறந்த பரிகாரம் என சுதந்திரா கட்சியின் பொதுக்காரியதரிசி திரு. எம். ஆர். மஸானி நிருபர்கள் மகாநாடொன்றில் பேசும்போது கூறினார்.

தற்போதைய காஷ்மீர் அரசாங்கம் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கவில்லையாதலால் புதிய தேர்தல் அவசியம் என அவர் கூறினார்.

"காஷ்மீர மக்கள் இந்தியாவுடன் இருப்பதையே விரும்புவார்கள் என நம்புகிறேன்" என்றும் அவர் கூறினார்.

# "வாக்குரிமையினுல் மந்திரியை வெளியேற்றுவோம்"

## தபால் தந்தி யூனியன் தலைவர் பேச்சு!

சிலாபம், செவ்வாய்

"வாக்குரிமை மூலம் திரு. இலங்கரத்னவை பாராளு மன்றத்திற்கு அனுப்பி வைத்தோம். அதே வாக்குரிமையின் உதவியால் அவரைச் சுட்டு விழ்த்துதோம். இதற்கு எங்களுக்கு துப்பாக்கி அவசியமில்லை" என்று தபால், தந்தி யூனியன் தலைவர் திரு. வில்பிரட் பெரேரா நீர்கொழும்பில் நடைபெற்ற கூட்டத்திலபேசும் போது கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

"பொருளாதார நெருக்கடியைக் காரணங்காட்டி, திரு. இலங்கரத்ன, தொழிலாளர்களின் 21 கோரிக்கைகளையும் நிராகரித்து விட்டார். பொருளாதாரத்தோடு சம்பந்தப்படாத கோரிக்கைகளையிட்டு என்ன கூறுகிறீர்கள்?

உத்தியோகத்தர்களுக்காக சில ரூபாய்களை செலவழித்து வசதி செய்து கொடுக்க முன்வராத அரசாங்கம், ஆயிரக்கணக்கான ரூபாய்களை வீணுக செலவு செய்கிறது."

## 'கூட்டுறவு வளர்ச்சி பெருகவேண்டும்'

ஊர்காவற்றுறை செவ்.

"மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயாத்தக் கூட்டுறவு வளர்ச்சி பெறவேண்டும். பலநோக்க கூட்டுறவுச் சங்கம் பலவகைகளில் மக்களுக்கு நன்மை செய்கின்றன." என்று காரைநகர் சிவகாமிஅம்பாள் ஐக்கிய பண்டகசாலைச் சங்கத்தின் புதுக் கட்டடத்தை திறந்துவைத்துப் பேசுகையில் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. இ. இராசரத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தீவுப் பகுதிக் காரியாதிகாரி திரு. பற்றிக் கூட்டுறவுக் கொடியை ஏற்றிவைத்தார். கூட்டத்தில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம், தீவுப்பகுதி கூட்டுறவு சமாசத் தலைவர் திரு. ப. கதிரவேலு, வித்தியாதரிசி திரு. ச. சபாபதி, திரு. வே. சுப்பிரமணியம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்கள்.

சங்கத்தலைவர் திரு. கே. சோமசுந்தரம் தலைமை தாங்கினர் காரியதரிசி திரு. கி. சிவமணி நன்றி கூறினர்.

## எதிர்தரப்பு . . .

3ம் பக்கத் தொடர்ச்சி)

காலி பொலிஸ் தலைமை நிலையத்தில் வி. ஈ. பெரேராவையும், இரு உதவிப்பொலிஸ் சுப்ரீண்டன்களையும் சந்தித்தேன். திரு. பெரேரா, திரு. நீல்டீ அல்விசை கைது செய்யும்படி இன்ஸ்பெக்டர் பெர்ணுண்டோவிடம் கூறினர். எதற்காக திரு. நீல்டீ அல்விசைக் கைது செய்யவேண்டுமென்று இன்ஸ்பெக்டர் பெர்ணுண்டோவிடம் கேட்டேன். தடுப்புக்காவல் உத்தரவு இருப்பதாக என்னிடம் அவர் தெரிவித்தார்.

நாங்கள் திரு. நீல்டீ அல்விசை கைது செய்து காலிக்கு கொண்டு வந்து ஒரு அறையில் வைத்திருந்தோம். பொலிஸ் சுப்ரீண்டன் திரும்பவும் என்னை பொட்டலைக்கு செல்லும்படி கூறினர்.

## 'சங்கங்களின் முக்கிய பொறுப்பு'

சுன்னுகம், செவ்வாய்

"வருங்கால சமுதாயத்தை நல்ல முறையில் ஆக்கித்தரும் பொறுப்பு சங்கங்களைச் சார்ந்ததே. மக்கள் ஒவ்வொரு துறையிலும் புத்துணர்ச்சி பெற்று ஆக்கமும் ஊக்கமும் பெற இச்சங்கங்கள் அயராது உழைக்கவேண்டும்"

சிப்பிழான் சனசமூக நிலையத்தின் ஆண்டுவிழாவில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்ட உடுவில் எம். பி. திரு. வி. தருமலிங்கம் உரை நிகழ்த்துகையில்தான் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்விழாவில் திரு. செ. நடராசா, பண்டிதர் வ. நடராசா ஆகியோரும் உரை நிகழ்த்தினர். நிலையத்தாரால் நடாத்தப்பெற்ற பேச்சு, விளையாட்டுப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்குத திரு. வி. தருமலிங்கம் பரிசில்களை வழங்கினர்.

பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் செ. துரைசிங்கம், உபதலைவர் செ. நடராசா, செயலாளர் ஆ மகாலிங்கம், உபசெயலாளர் கு. கணேசலிங்கம், பொருளாளர் சோ. சிவப்பிரகாசம், கணக்குப் பரிசோதகர் மா. தம்பிஐயா, பாதுகாவலர் சி. பஞ்சலிங்கம், உபபாதுகாவலர் க. சிவனேசராசா. 7 பேரைக் கொண்ட செயற்குழுவொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## தொழில் நிபுணருக்கு பிரிவுபசாரம்

உரும்பிராய், திங்கள்

இலங்கை நூற்றல் நெய்தல் ஆலை வரையறை ஸ்தாபனத்தில் கடந்த ஒரு வருடகாலமாக தொழில்நுட்ப நிபுணராகக் கடமையாற்றி விலகிச் செல்லும் திரு. டி. எஸ். ஜி. எல். ஆரியதாசாவுக்கு தொழிற்சாலையில் பயிற்சிபெறும் ஊழியர்களாலும் மற்றும் உத்தியோகஸ்தர்களாலும் பிரிவுபசார வைபவமொன்று நடத்தப்பட்டது.

நெசவு ஆலைக் காரியதரிசி திரு. பொ. சேதுபதி இவ் வைபவத்துக்குத் தலைமை தாங்கினர். திரு. சேதுபதி தமது தலைமையுரையில் திரு. ஆரியதாசா நம்மை விட்டுப் பிரிந்து சென்றாலும் வேண்டிய உதவியை கேட்கும்போது கண்டிப்பாகச் செய்வார்எனக் குறிப்பிட்டார்.

மற்றும் பலரும் திரு. ஆரியதாசாவின் சேவையைப் பாராட்டிப் பேசினர்கள்.

## பாடசாலைகளின் கலைவிழா

பளை, திங்கள்

சென்ற வியாழக்கிழமை கிளிநொச்சித் தொகுதிப் பாடசாலைகளின் கலைவிழா கிளிநொச்சி சண்முகா தியேட்டரில் நடைபெற்றது. இவ்விழாவில், நடனம், நாடகம், கர்நாடக சங்கீதம், அபிநயப்பாடல் ஆகிய விஷயங்கள் இடம்பெற்றன. மேற்படி விழாவில் பளை மகாவித்தியாலயம் நடனப் போட்டியில் பங்குபற்றியது. நடனப்போட்டியில் முதலாம் இடத்தை கிளிநொச்சி சந்திரேசாக் கல்லூரியும் இரண்டாம் இடத்தை பளை மகாவித்தியாலயமும் பெற்றன. நாடகப் போட்டியில் முருகானந்தா பாடசாலை முதலாம் இடத்தைப் பெற்றது. இவ்விழாவில் முதலாம், இரண்டாம் இடத்தைப் பெற்ற நிகழ்ச்சிகளுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

## கி. ச. அங்கத்தவர்

ஊர்காவற்றுறை, திங்கள்

நாரந்தனை கிராம சபைத் தேர்தலில் 7-ம் வட்டாரத்திற்கு திரு. போல் அங்கத்தவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

## "சோவியத்தின் சாதனை"

யாழ்ப்பாணம், செவ்வாய்

"சிறிமாவின் மகன் அநுரா என். எம். பெரேராவை கிரிக்கெட் ஆட்டத்தில் தோற்கடிக்க முடியுமானல் சிறிமா அரசியலில் "என். எம்."மை தோற்கடிப்பதை எவர்தான் தடுக்க முடியும்" என்று யாழ்ப்பாணம் மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சிக் கமிட்டியின் தலைவர் வி. ஏ. கந்தசாமி "எனது சோவியத் அனுபவங்கள்" என்ற தலைப்பில்யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

காங்கேசன்துறை பட்டின சபை முன்னுள் தலைவர் டாக்டர் எஸ், வி. சீனிவாசகம் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

திரு. வி. ஏ. கந்தசாமி மேலும் குறிப்பிட்டதாவது:-

மனித சமுதாயத்துக்கு அத்தியாவசிமான சகல துறைகளிலும் சோவியத் யூனியன் நிலைநாட்டியுள்ள சாதனைகளால் சோஷலிஸம் உலகிலே நிலைபெற்ற சித்தாந்தமாகிவிட்டது.

சோவியத் யூனியனின் வரலாறு தொழிலாள வர்க்கத்தின் தலைமையில்லாமல் சோஷலிஸ அடிப்படையில் எந்த அரசாங்கமும் இயங்கமுடியாதென்பதை தெற்றெனக்காட்டிவிட்டது.

## மனவிரக்தியால் பிக்கு தற்கொலை

பையாகலை, செவ்.

தனது மாணவ பிக்கு ஒருவர் பிக்கு வாழ்க்கையைக் கைவிட்டமையால் ஏற்பட்ட விரக்தியால் ஒரு மகாநாயக்க தேரோ நச்சுத்திராவகம் அருந்தி தமது உயிரை மாய்த்துக் கொண்டார்!

ஸ்ரீ சுனீந்திர பன்னதீச மகா நாயக்க தேரோவின் மரணம் குறித்து, திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எச். ஏ. டி. தர்மரத்தின விசாரணை நடத்தியபோது மேற்கண்ட விபரம் தெரிவிக்கப்பட்டது. ஓமத்த சந்திர ஸ்ரீ தேரோ தமது சாட்சியத்தில் கூறியதாவது:

"நாலும் இதே கோவிலில் தான் வசிக்கிறேன். நாயக்க தேரோ தமது மாணவ பிக்கு ஒருவர் பிக்கு வாழ்க்கையை உதறித் தள்ளியமை குறித்து மனவேதனையடைந்திருந்தார். என்பதையும் அறிவேன்.

சம்பவம் நடந்த தினம் காலை 3 மணியளவில் தேரோ வேதனையாற் புலம்புவதை அவதானித்தேன். நான் அவரது அறைக்குட் சென்ற போது ஒரு சிறிய கண்ணுடிக் குப்பியும் ஒரு கோப்பையும் அவர் அருகில் இருப்பதைப் பார்த்தேன். கோப்பையில் நச்சுத்திராவக மணம் வீசியது".

வைத்திய பரிசோதனையின் பின் தற்கொலைச் சம்பவம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.


# எப். ஜீவாஜி அன்ட் பிரதர்ஸ்

தாள், அச்சடிக்கும் மை, உபகரணங்கள்,
சகல பாடசாலைப் புத்தகங்கள், அப்பியாசப்
புத்தகங்கள் முதலியவற்றுக்கு
மொத்த,சில்லறை விற்பனையாளர்கள்.
தொலைபேசி: 7126
இல. 9 & 11, ஜுபிலி பசார்,
(ராணி தியேட்டருக்கு அருகாமை)
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.







# காந்தி இல்லம் இவ்வருட சாம்பியனானது
## உடல் விருத்தி போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு
அண்மையில் நடைபெற்ற கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயண சனசமூகநிலைய பாரதி ஐக்கிய செசவுநிலைய உடல் விருத்திப்போட்டிகளில் காந்தி இல்லம் கூடுவலான புள்ளிகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளது. போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

**நீளம் பாய்தல்**

பாலர்பிரிவு: ஐ. ரங்கநாதன், க. சதாசிவம், அ பாலசுப்பிரமணியம். கீழ்ப்பிரிவு: சு. சண்முகநாதன், சி முத்துத்தம்பி, அ. கதிரேசு. மத்தியபிரிவு: வ. சுப்பிரமணியம், ந. செல்லத்துரை, க கந்தசாமி. மேற்பிரிவு: செ. விசுவலிங்கம், இ. இராசலிங்கம், செ. நடராசா. உயர்மேற்பிரிவு: க. கதிரேசு, செ. இராசையா, ஐ. நல்லையா.

**குதித்து மிதித்துப் பாய்தல்**

கீழ்ப்பிரிவு: சு. சண்முகநாதன், அ. கதிரேசு, அ. பாலசிங்கம். மத்தியபிரிவு: வ. பரஞ்சோதி, க. கந்தசாமி. மேற்பிரிவு: இ. இராசலிங்கம், செ. விசுவலிங்கம், அ. நாகலிங்கம். உயர்மேற்பிரிவு: இ. இராமையா, ஐ. நல்லையா, செ. இராசையா.

**உயரம் பாய்தல்**

கீழ்ப்பிரிவு: அ. பாலசிங்கம், சு. சண்முகநாதன், ஐ. வைத்திலிங்கம் மத்தியபிரிவு: வ. சுப்பிரமணியம், வ. பரஞ்சோதி, க. குழந்தைவேலு. மேற்பிரிவு: செ. விசுவலிங்கம், நா. கிருஷ்ணபிள்ளை, ஐ. இராசையா. உயர்மேற்பிரிவு: க. கதிரேசு, இ. இராசையா, ஐ நல்லையா.

**தடி ஊன்றிப் பாய்தல்**

கீழ்ப்பிரிவு: அ. கதிரேசு, சு. சண்முகநாதன், ஐ வைத்திலிங்கம். மத்தியபிரிவு: வ. சுப்பிரமணியம், வ. பரஞ்சோதி, க. குழந்தைவேலு. மேற்பிரிவு: இ இராஜலிங்கம், செ. விசுவலிங்கம், நா. கிருஷ்ணபிள்ளை. உயர்மேற்பிரிவு: க. கதிரேசு, ஐ. நல்லையா.

**குண்டெறிதல்**

மத்தியபிரிவு: ந. செல்லத்துரை, க. குழந்தைவேலு, மு. அருமைநாயகம். மேற்பிரிவு: இ. இராசலிங்கம், செ. நடராசா.

**சாக்கோட்டம்**

நா. சங்கரப்பிள்ளை, க. செல்வம், சி. சின்னத்துரை.

**வாயினுல் தோடம்பழம் எடுத்தல்**

ஐ. வைரமுத்து, பொ. இரத்தினம், க. செல்வம்.

**75 யார் ஓட்டம்**

பாலர்பிரிவு: ஐ. ரங்கநாதன், வ. அருணசலம், மா. தர்மகுலசிங்கம். கீழ்ப்பிரிவு: கி. கதிரேசு, சி. முத்துத்தம்பி, அ. பாலசிங்கம்.

**100 யார் ஓட்டம்**

பாலர்பிரிவு: ஐ. ரங்கநாதன், வ. அருணசலம், மா. தர்மகுலசிங்கம். கீழ்ப்பிரிவு: அ கதிரேசு, சு. சண்முகநாதன், அ. பாலசிங்கம். மத்தியபிரிவு: ந. செல்லத்துரை, வ. சுப்பிரமணியம், க. கந்தசாமி. மேற்பிரிவு: செ விசுவலிங்கம், நா. கிருஷ்ணபிள்ளை, செ. நடராசா. உயர் மேற்பிரிவு: செ. இராசையா, ஐ. பரமநாதன், இ. இராமையா.

**75 யார் ஓட்டம்**
**பெண்கள்**

பாலர்பிரிவு: வ. அன்னமலர், ப. யோகேஸ்வரி, பொ. யோகமலர். கீழ்ப்பிரிவு: வ. கமலாதேவி, அ. நல்லம்மா, வ. தவமணி.

**75 யார் ஓட்டம்**
**ஆண்கள்**

பாலர்பிரிவு: ஐ. ரங்கநாதன், வ. அருணசலம், மா. தர்மகுலசிங்கம். கீழ்ப்பிரிவு: அ. கதிரேசு, சி. முத்துத்தம்பி, அ. பாலசிங்கம்.

**100 யார் ஓட்டம்**
**பெண்கள்**

பாலர்பிரிவு: வ. அன்னலட்சுமி, ஐ. தவமணிதேவி, ஐ. இராசமலர். கீழ்ப்பிரிவு: வ. கமலாதேவி, அ. நல்லம்மா, பொ. மல்லிகாதேவி.

**100 யார் ஓட்டம்**
**ஆண்கள்**

பாலர்பிரிவு: ஐ. ரங்கநாதன், வ. அருணசலம், மா. தர்மகுலசிங்கம். கீழ்ப்பிரிவு: அ. கதிரேசு, சு. சண்முகநாதன், அ. பாலசிங்கம்.

மத்தியபிரிவு: ந செல்லத்துரை, வ. சுப்பிரமணியம், வ. பரஞ்சோதி.

மேற்பிரிவு: செ. விசுவலிங்கம், நா. கிருஷ்ணபிள்ளை, செ. நடராசா.

உ. மே. பிரிவு: செ இராசையா, ஐ. பரமநாதன், இ. இராமையா.

**220 யார் ஓட்டம்**
**ஆண்கள்**

மத்திய பிரிவு: ந. செல்லத்துரை, வ. சுப்பிரமணியம், க. கந்தசாமி

மேற்பிரிவு: நா. கிருஷ்ணபிள்ளை, சு. நாகலிங்கம், செ. நடராசா.

உ. மே. பிரிவு: செ. இராசையா, இ. இராமையா, ஐ. பரமநாதன்.

**சாம்பியன்கள்**

பாலர் பிரிவு பெண்கள்: பொ. யோகமலர்.

கீழ்ப்பிரிவு: வ. கமலாதேவி.

பாலர் பிரிவு ஆண்கள். ஐ ரங்கநாதன்.

கீழ்ப்பிரிவு: சு. சண்முகநாதன், அ. கதிரேசு.

மத்தியபிரிவு: ந. செல்லத்துரை.

மேற்பிரிவு: செ. விசுவலிங்கம்.

உ. மே. பிரிவு: க. கதிரேசு.

**விநோத உடைப்போட்டி**

ப. வீரம், பொ. யோகமலர், மு. அருமைநாயகம்.

**இல்லங்கள்**

சாந்தி: 171.
பாரதி: 126.
லெனின்: 113.

## வானொலிநிகழ்ச்சிகள்
### புதன் 29-4-64
### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-50 இஸ்லாமியநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 நேயர்விருப்பம், 7-15 பேச்சு, 7-30 ஜெகதாம்பிகை பரமநாதன் — பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வி. சுந்தரம் — பாட்டு, 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-30 மங்கள இசை 6-55 அருள்வாக்கு, 7-00 துதிப்பாடல்கள், 7-30 இசைக்கோவை வேதாரண்யம் ஜி வேதமூர்த்தி — நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்தியஇசை, 1-50 மெல்லிசை, 2-10 காரைக்குடி கமலா பசுபதி — வீணை, 2-40 ஜெயபேரிகை — வாத்திய இசை.

மாலை 5-15 காரைக்குடி கமலா பசுபதி — வீணை.

இரவு 6-20 கிராமநிகழ்ச்சிகள், 7-30 நூல் மதிப்புரை, 7-45 கபீர் — இசைச்சித்திரம், 8-00 திரைப்பட இசை, 8-45 குரலிசை, 9-15 இம்மாதப்பாடல், 9-20 பொன்னெனிர் பாரதம், 9 45 அருணகிரிநாதர் — இசைவிழா.

# மென்பந்து கிரிக்கெட் போட்டி
## நல்லூர்-அரியாலை கோஷ்டிகள் கலந்து கொள்கின்றன

யாழ்ப்பாணம், புதன்
நல்லூர் முற்போக்கு வாலிப முன்னணி ஸ்புட்னிக் விளையாட்டுக் கழகத்தினருக்கும் அரியாலை சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினருக்குமிடையே இன்று மென்பந்து கிரிக்கெட் போட்டி நடைபெறும். வருடந்தோறும் சிறந்த முறையில் இக் கிரிக்கெட் போட்டியை நடத்துவதென்று இரு கழகத்தினரும் தீர்மானித்துள்ளதைத் தொடர்ந்து இரு கழகத்தினருக்குமிடையே இன்று முதல் "மோதல்" இடம் பெறும்.

ஒருநாள் மட்டும் நடைபெறும் இக் கிரிக்கெட் போட்டி இன்று காலை 9 மணிக்கு ஸ்புட்னிக் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகும். போட்டி முடிவில் ஸ்புட்னிக் விளையாட்டுக் கழக மண்டபத்தில் சிறந்த வீரர்களுக்குரிய பரிசுகள் வழங்கப்படும். இரு கோஷ்டிகளின் விபரம் வருமாறு:

நல்லூர் ஸ்புட்னிக் விளையாட்டுக் கோஷ்டி:

கே. நாகேந்திரம் (தலைவர்), கே. சிறீ (உப-தலைவர்), ரி. இராஜசுந்தரம், ரி. ஜெயசுந்தரம், ரி. நடனசிவம், கே. தயானந்தராசா, பி. சச்சி, எஸ். சிவகுமாரன். ரி. நற்குணமாணிக்கம், பி கேசவநாதன், பி.பாலேந்திரா, ரி சற்குணம், கே.சச்சி.

அரியாலை சனசமூக நிலைய விளையாட்டுக் கோஷ்டி:

எம். செல்வராசா (தலைவர்) கே. மகாலிங்கம், ரி. புவனனந்தன், பி. தவநாதன், கே. பரமலிங்கம், கே. உருத்திரகுமார், கே. கணேசலிங்கம், வி. சுஜேந்திரன், எஸ். யோகநாதன், ரி சண்முகசுந்தரம், ஜி. வாமசிவன், ஜி. பிரேமசுந்தரம், ஐ. தியாகராசா.

## மக்கள் முன்னேற்ற சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்.
பாஷையூர் மக்கள் முன்னேற்ற சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் உப-தலைவர் திரு. ஆ. மாட்டின் தலைமையில் பாஷையூர் மக்கள் முன்னேற்ற சங்க சனசமூக நிலையத்தில் 9 அங்கத்தவர்களுடன் நடைபெற்றது.

செயலாளர் திரு. எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளை சென்ற கூட்ட அறிக்கை வாசித்தார்.

சங்கத்தின் சார்பில் விளையாட்டுக்கள் நடாத்துவதற்கு அதற்கு திருவாளர்கள் அ. செபஸ்தியாம்பிள்ளை, அ. அருளானந்தம், கே. எஸ. அந்தோனிப்பிள்ளை ஆகியோர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

பாஷையூர் மக்களுடைய பஸ பிரயாணக் கட்டணம் குறைக்க வேண்டும் என்று இலங்கை போக்குவரத்துச் சபையை கேட்டுக்கொள்வதென்றும், குழந்தைகளுக்கு கொடுக்கும் பால் போதாமல் இருப்பதால் கூடுதலாக பால் தந்து உதவுமாறு கூட்டுறவுப் பால் சபையாரிடம் கேட்டுக் கொள்வதெனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## பாம்புகளின் நடமாட்டம்

பளை, திங்கள்
கடந்த இருமாத காலமாக பச்சிலைப் பள்ளிப் பகுதியில் வாழும் மக்கள் வீடுகளில் பாம்புகளின் நடமாட்டம் அதிகரித்து வருவதாக அறியப்படுகிறது. ஒரு மாத காலத்துக்குள்ளே 4 பேர் பாம்புக்கடியினுல் இறந்துள்ளனர். ஏராளமான பாம்புகள் வீடுகளில் நடமாடி இப்பகுதி மக்களை திகில் அடையச் செய்கின்றன.

## தேவை

கோப்பாய் தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு உதவி மனேஜர் தேவை.
தகைமை: ஜே. எஸ். ஸி.
வயது: 22-க்கு மேல் 30 வரை.
சம்பளம்: 50/- — 100/-
10 × 5.
6-5-64-க்கு முன் விண்ணப்பிக்கவும்.

ச. இராசரத்தினம்,
கௌரவ காரியதரிசி.

341

## அல்லைப்பிட்டிக் கிராமசபை
### கேள்விப்பத்திர அறிவித்தல்

1. மண்டைதீவு காரைப்புலரோட்டு வேலைக்கும்,
2. மண்டைதீவு மருத்துவமனை வீதி வேலைக்கும் சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் 1964-ம் ஆண்டு வைகாசிமாதம் 13-ம் திகதி காலை 10-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் 12-5-64-ம் திகதி மாலை 3 மணி வரை வழங்கப்படும். விபரங்கள் கிராமசபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

க. கைலாசபிள்ளை,
அக்கிராசனர்,
அல்லைப்பிட்டிக் கிராமசபை.
அலுவலகம், மண்டைதீவு,
27-4-64. 343

## ORDER NISI
### In The District Court of Jaffna.

In the matter of the Intestate Estate of the late Ramalingam Ponnuthurai of Neervely.

Ponnuthurai Sivaganasundaram of Kokuvil Jaffna.
Petitioner.

No. Testy 1425

This matter coming on for disposal before N. Sivagnanasunderam, Esquire, District Judge of Jaffna, on the 20th day of January 1964 in the presence of Mr V. Navaratnarajah Proctor on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 18th day of January 1964 having been read

It is Ordered that Letters of Administration to the estate of the deceased abovenamed be issued to the Petitioner abovenamed as the lawful son of the deceased, unless any person or persons interested shall on or before the 20th day of March 1964 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 20th day of January 1964.
(Sgd). P. Somatilakam,
District Judge. Jaffna.

Time to show cause is extended to 15 th May 1964.
Sgd: N. Sivagnanasunderam,
District judge,
Jaffna.
338 25-3-64

## ஆனைக்கோட்டை இளைஞர் வெற்றி

சுழிபுரம், செவ்வாய்
ஆனைக்கோட்டை இளைஞர் கோஷ்டிக்கும் சுழிபுரம் சூட்டிங் ஸ்ரார்ஸ் கோஷ்டிக்கும் இடையே சிநேகபூர்வமான ஒரு கிரிக்கெட் போட்டி சுழிபுரம் அரசினர் விக்டோரியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. ஆனைக்கோட்டை இளைஞர்கள் போட்டியில் வெற்றிபெற்றனர்.

## The Jaffna Academy'
Chundikuli.

Re-opens on 5th May 1964.

Admissions for December G. C. E. Ordinary Level and Advanced Level Classes on 4th May 1964. Vocational Subjects included in the Curriculum. Don't wait for the results Joint the Classes immediately.

Accommodation available in the Hostel. Close supervision and help in studies by 2 resident masters.

342 Director.

## வரி விளம்பரம்

**உள்நாட்டுத் தயாரிப்புகள்**

உள்நாட்டுத் தயாரிப்புகள் என்பதற்காக வாங்குங்கள் என்று நாம் கூறவில்லை வெளிநாட்டுத் தயாரிப்புகளிலும் பார்க்கச் சிறந்தவை, விலை குறைந்தவை என்றே கூறுகிறோம். விபரங்களுக்கு ஆங்காங்கே உள்ள பிரதிநிதிகளுடன் அல்லது எங்களுடன் கலந்துகொள்ளவும். அ. த. பாலசுப்பிரமணியம், அளவெட்டி. 1947

**வீடு வாடகைக்கு**

கே. கே. எஸ். வீதியில் 504-ம் நம்பர் (தட்டாதெரு) வீடு (எல்லா வசதிகளுடன்) வாடகைக்கு இருக்கிறது. விபரங்கட்கு: எஸ். கே. சேனதிராசா, 'சேனதிராசா நகைமாளிகை', கொக்குவில் கிழக்கு. 261

**காணவில்லை**

24-ந் திகதி எனது சயிக்கிளில் கட்டியிருந்த கணக்குப் புத்தகம்தவறிப்போய்விட்டது. ஆரியகுளச் சந்தியிலிருந்து குருநாதகோயிலுக்கிடையில். கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து மு. சி. வேலுப்பிள்ளை, சிறும்பிடிய யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்குச் சேர்ப்பிக்கவும்தகுந்த சன்மானம் கொடுக்கப்படும். 268.

## Important Announcement
### Secretarial and Accountancy Tutory

1. The above institute also provides tuition for Intermediate Examination of the Institute of Bankers to be held in September.

2. Applications for all courses inclusive of the Intermediate of Cost and Works Accountants and Chartered Secretaries will be finalised before 30th instant.

3. Failing accommodation in the morning or After noon Sessions, accommodation can be provided in the evening courses which will be from 5 — 7 p. m.

4. The composite fees per month for Secretaries Intermediate is Rs 50/-, for cost and Works Rs 60/- and for Banking Rs. 40/- The fees per subject is Rs. 15/-.

Contact Registrar: Kumaraswamy Buildings, Opposite Bus Stand. Power-House Road, Grand Bazaar, Jaffna. 257

## கைத்தொழில் மதிப்பீடு
### மந்திரி நடவடிக்கை

கொழும்பு, செவ்வாய்
அங்கீகரிக்கப்பட்ட சகல கைத்தொழில்கள் சம்பந்தமாகவும் மதிப்பீடு நடத்த கைத்தொழில் வர்த்தக மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இவ்வித மதிப்பீடு கைத்தொழில் வளர்ச்சிக்கு வழிவகுக்குமென மந்திரி நம்புவதாகத் தெரிகிறது.

# ஊர்காவற்றுறையில் குடிதண்ணீர் கஷ்டம்

யாழ்ப்பாணம், புதன்

ஊர்காவற்றுறைப் பகுதியில் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வருடாவருடம் இப்பருவத்தில் அங்கு குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுவது வழமைதான். என்ருலும் இம்முறை உரிய காலத்துக்கு முன்பாகவே வரட்சி ஏற்பட்டுள்ளதால் தண்ணீர் தட்டுப்பாடும் முன்பாகவே ஏற்பட்டுவிட்டது.

இதுசம்பந்தமாக ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜயவீராவைச் சந்தித்து ஊர்காவற்றுறைப் பகுதியில் ஏற்பட்டுள்ள தண்ணீர் தட்டுப்பாட்டை விளக்கினர். குடிதண்ணீர் விநியோகத்துக்கு ஒழுங்கு செய்யுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஊர்காவற்றுறைப் பகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்து தண்ணீர் நிலைமை பற்றித் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் தண்ணீர் விநியோகத்துக்கு ஒழுங்கு செய்யுமாறும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

## 'இடதுசாரியினர் திறமைசாலிகள்'

கொழும்பு, செவ்வாய்

சோஷலிஸ அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு மக்கள் 1956-ம் ஆண்டும், 1960-ம் ஆண்டும் தங்கள் முழு ஆதரவையும் தந்துள்ளார்கள். ஆதலால் சோஷலிஸ அரசாங்கத்தின் முன்னேற்ற கொள்கைகளை பாதுகாக்க நான் தொடர்ந்து போராடுவேன் என்று எம். ஈ. பி. தலைவர் திரு. பிலிப் குணவர்த்தன இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது கூறினர்.

இடதுசாரி தலைவர்கள் எல்லோரும் திறமைவாய்ந்தவர்களென்றும் நாட்டின் முன்னேற்றத்திற்கு பாடுபட அவர்கள் தயாராக இருக்கிருர்களென்றும் அவர் தொடர்ந்து பேசும்போது கூறினர்.

## டயர் டியூப் தயாரிப்பு அதிகரிக்கும் டயர்கூட்டுத்தாபனம் முயற்சி

கொழும்பு, செவ்வாய்

இலங்கை டயர் கூட்டுத்தாபனம் சைக்கிள் டயர் டியூப் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கு கைத்தொழில் வர்த்தக மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயகா அதிகாரம் அளித்துள்ளார். கூட்டுத் தாபனம் வருடமொன்றுக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் டயர், டியூப் உற்பத்தி செய்யுமென்றும் இத் திட்டத்துக்கு ரூ. 7 லட்சம் செலவாகுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தூதுகோஷ்டியினர் இலங்கை வந்தனர்

கொழும்பு. செவ்வாய்

கொரியா ஜனநாயக குடியரசின் மக்கள்சபை அங்கத்தவர் தூதுகோஷ்டியினர் இன்று காலை இலங்கை வந்துசேர்ந்தனர்.

திரு. ஷி. ஷங்தாத் தலைமையில் வந்துள்ள 6 பேர் கொண்ட இத்தூதுகோஷ்டியினரை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சபாநாயகர் திரு. ஹியூபெர் ஞண்டோவரவேற்ருர்


REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3Shows. Sats.&Suns. Four
Rock hudson - Kirk douglas
in
The Last Sunset
(Colour)
From 1-5-64
TOKYO by NIGHT



சினிமாஸ் திரைகளில்
அடுத்த திரை விருந்து
எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
நானும் ஒரு பெண்
தென்னுட்டில் 125 நாட்களுக்கு மேல்
ஓடிய உன்னத தமிழ் திரை விருந்து

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
நிந்தாவூர் சினிமா (நிந்தவூர்) ராஜ்மகால் (கலமுனை) சந்தியா (கம்பளை)
மற்றும் 4 திரைகளில்



எம். ஜி. ராமசந்திரன்—பி. சரோஜாதேவி
நடித்த
பெரிய இடத்துப் பெண்


## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யில்லை. படிக்காமல் விடவும் முடியவில்லை. இந்தத் தர்ம சங்கடத்துக்கு என்ன செய்வது? அரசாங்கத்தின் கையை நம்பி இராமல், யார் தங்கள் வாழ்க்கைக்கான கைத்தொழில், கமம் முதலிய பயிற்சிகளை முன்யோசனையுடன் தங்கள் வசதிக்கேற்பச் செய்து கொள்ளுகின்ருர்களோ, அவர்களே புத்திசாலிகள். அவர்களுக்கு அதிக சங்கடமிராது.

* * *

சிறுகதையாளரான அழகு சுப்பிரமணியத்தைப்பற்றி உங்களுக்குத் தெரியுமோ? நமக்குத் தெரியாவிடினும், அவரைப்பற்றிய புகழ் இந்தியா, பிரிட்டன், ஜேர்மனி போன்ற வெளி இலக்கிய உலகத்தில் நன்கு பரவியுள்ளது.

அவரது பெயரைக் கேட்டதும் அவர் இந்தியாக்காரரா என்று என் அன்பரொருவர் கேட்டார். அவர் பரம்பரையாக அசல் யாழ்ப்பாணமென்றும், பாரிஸ்டர், அட்வகேட், எழுத்தாளர் என்றும், அவர் தகப்பனுர் ஒரு நீதிபதி யென்றும், அவர் எழுதிய சிறுகதைகள் உலகப் புகழ்பெற்றவை என்றும் கூறியதும் அந்த அன்பர் வியப்பும் மகிழ்ச்சியுமடைந்தார்.

அழகு சுப்பிரமணியம் எழுதியுள்ள "பெரிய பெண்" எனும் ஆங்கிலக் கதைக்கொத்து வெளியீட்டுவிழா, யாழ்ப்பாணம் அமெரிக்க தகவல் காரியாலய மண்டபத்தில் நடைபெற்றது. பல இலக்கிய அன்பர்களும் பிரமுகர்களும் வந்திருந்து அவரைப் பாராட்டினர். தமிழ், கன்னடம், ஜெர்மனி முதலிய பல மொழிகளில் அவரது கதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளதாம். ஒரு தமிழர் இவ்விதம் உலகப் புகழ் பெற்றுள்ளதை அறிய மிகவும் பெருமையாக இருந்தது. அவருக்கு எல்லா ஆதரவும் உற்சாகமும் அளிக்கவேண்டும்

வேம்படி என்ருல் அவருக்கு உயிர். முன் அவர் ஈழநாடு பத்திரிகையிலும் வேம்படிக் கல்லூரியைப்பற்றி நன்கு எழுதியிருந்தார். "பெரிய பெண்" என்ற கதையில் வேம்படிக்குப் பதில் "புளியடிப் பள்ளிக்கூடம்" என்று ஏன் எழுதினீர்கள் என்று ஓரன்பர் கேட்டதற்கு, மேல்நாடுகளில் தாம் அதிககாலம் இருந்தபோது, வேம்பு என்பதற்கு ஆங்கிலத்திலே 'மார்க்கோஸா' என்பதை மறந்து, "டாமரிண்ட்" (புளி) என்று எழுதிவிட்டதாக அவர் பச்சையாகக் கூறி பலரையும்சிரிக்கவைத்துவிட்டார்

* * *

பஞ்சபூத வலையிற் படுவதற்
கஞ்சி நானும் ஆமாத்தூர்
அழகனை
நெஞ்சினுல் நினைந்தேன்
நினைவெய்தலும்
வஞ்ச ஆறுகன் வற்றின
காண்மினே

—திருநாவுக்கரசர்

## ரயில் மோதி முதியவர் மரணம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

நேற்றுக்காலை 10-30 மணியளவில் சுமார் 70 வயதுடைய முதியவர் ஒருவர் இங்கிருந்து காங்கேசன்துறை சென்றுகொண்டிருந்த புகையிரதத்தினுல் மோதப்பட்டு மரணமானுர். இவர் யார் என்பது பற்றி இதுவரை அடையாளம் கண்டுபிடிக்கப்படவில்லை. ஸ்டான்லி வீதியில் உள்ள ரெயில் கடவையில் இச்சம்பவம் நடைபெற்ற / மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினுர்.

## தாணுப்பிள்ளை

புதுடில்லி, ஏப். 28

பஞ்சாப் கவர்னர் பதவியிலிருந்து விலகும் திரு. பட்டம் தாணுப்பிள்ளை டில்லிக்குப் புறப்பட்டார். மே 4-ந் திகதி அவர் ஆந்திர பிரதேச கவர்னராகப் பதவி ஏற்பார்.

# அழகு சுப்பிரமணியத்தின் கதைகள் ஆவலைத் தூண்டுவன

## நூல் வெளியீட்டுவிழாவில் மாஜிஸ்திரேட் பாராட்டு

யாழ்ப்பாணம், செவ்

திரு. அழகுசுப்பிரமணியத்தின் கதைகள், நம்பகமானவையும், படிக்கப்படிக்க ஆவலைத் தூண்டுபவையுமாகும் என்று பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. பி. ரூபேர்ட் சில்வா, திரு. அழகுசுப்பிரமணியம் எழுதிய 'பெரிய பெண்' என்ற சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் உரை நிகழ்த்துகையில் கூறினுர்.

இவ் வெளியீட்டு விழா திரு. அழகுசுப்பிரமணியத்தைப் பாராட்டுமுகமாக, அவருடைய இலக்கிய நண்பர்களால் ஒழுங்குசெய்யப்பட்டது. யாழ்ப்பாணத்திலுள்ள அமெரிக்க தகவல் நிலைய மண்டபத்தில் நடைபெற்ற இவ் விழாவிற்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. பி. ரூபேர்ட் சில்வா தலைமை தாங்கினுர்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி உப-அதிபர் திரு. எஸ். சிறிநிவாசன், இத் தொகுப்பிலுள்ள கதைகளை விரிவாக விமர்சனம் செய்தபொழுது உலகிலுள்ள சிறந்த கதைகளுள் ஒன்ருக "கணித மேதை" என்ற கதையை மதிப்பீடு செய்யலாமென்று கூறினுர்.

அவரைப் பாராட்டியவர்களுக்கு விடையிறுக்குமுகமாக திரு. அழகுசுப்பிரமணியம் பேசும்பொழுது எழுத்தாளர்கள் தூரதேசத்தில் இருக்கும் பொழுது தாயகத்தை தமது படைப்புக்களில் நினைக்கும் இயல்புகொண்டுள்ளவர்களென்றும் தான் லண்டனில் இருந்த பொழுது, இலங்கையைப் பற்றியே எழுதத் தூண்டப்பட்டாரென்றும், யாழ்ப்பாணம் வந்ததும் லண்டன் மாநகரம் பற்றியே எழுதத் தூண்டப்படுகிருரென்றும் குறிப்பிட்டார்.

இந்தியாவின் கீர்த்திபெற்ற நாவலாசிரியர் திரு. ஆர். கே. நாராயணன் நாவல்கள் எழுதும் பொழுது, எப்பொழுதும் அவருடைய சொந்த கிராமமான மால்குடியைப் பற்றி குறிப்பிடத் தவறியதில்லையென்றும் அவர் கூறினுர்.

திருவாளர்கள் ஏ. ஈ. தம்பர், எஸ். சரவணபவானந்தன் ஆகியோரும் நூலையும் ஆசிரியரையும் பாராட்டிப் பேசினுர்கள்.

# திட்டி வீடமைப்புத் திட்டவேலை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது

நல்லூர், புதன்

யாழ்ப்பாணம் மாநகரசபையினுல் உருவாக்கப்பட்டுவரும் திட்டி வீடமைப்புத்திட்ட வேலைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மாநகரசபை உறுப்பினர்கள் பலர் மேயரிடமும் கமிஷனரிடமும் செய்துகொண்ட புகாரைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திட்டி வீடமைப்புத் திட்டத்திற்காக உருவாக்கப்பட்டு வரும் கட்டிடங்கள் தகுந்தவாறு அமைக்கப்படவில்லை என்று செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து மாநகரசபைக் கமிஷனர், மேயர் ஆகியோர் அங்கு சென்று பார்வையிட்டனர். கட்டிடக் கலவைக்களம். அமைப்புக்களம் சந்தேகத்திற்குரியதாக இருந்தமையால் வீடமைப்பு வேலைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. கலவை சம்பந்தமாகப் பரிசீலனை செய்ய அரியப்பட்ட கற்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிகிறது.

## தமிழர் புறக்கனித்தாலன்றி...

எம்மை வழி நடத்தி எமக்கு விமோசனம் காட்ட விளைப்பவர்கள் தொகை மிகக் குறைவாக உள்ளது. பொதுச்சேவை கஷ்டமானது. பொதுச்சேவையில் ஈடுபடுபவன் நன்மைபெற முடியாது. பொதுவாழ்வில் ஈடுபடுபவர்கள் தான் இதனை உணர முடியும்.

தமிழுக்காக உழைக்க வந்துள்ளவர்களை போற்றிப் பாதுகாத்து ஊக்குவிக்க வேண்டியது தமிழ்பேசும் மக்கள் கடமையாகும். மோசமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிற நாம் விடிவு காலம் வராதா என்று ஏங்குகிருேம். எமது உரிமைகளைப் பெற ஆயிரக்கணக்கில் இளைஞர்கள், சமூகத்தொண்டர்கள் முன்வர வேண்டும். அரசியல் கிளர்ச்சி விடுதலையோ பொருளாதார அபிவிருத்தியோ கலாசார விழிப்புணர்ச்சியோ ஏற்படவேண்டிய காலமிது சமூகத் தொண்டர்களை குறுக்கே நின்று தடைசெய்யாமல் அவர்களை ஊக்குவிக்கவேண்டும். 400 ஆண்டுகளாக அடிமைத் தளையில் சிக்கிக்கிடந்த நாம் இந் நாட்டின் அச்சாணியாக இருந்திருக்கிருேம். ஆங்கிலம் படித்து உத்தியோகம் பார்த்த நாம் ஆங்கிலேயராக மாறிவிடவில்லையே என்றும் சிங்களம் படிப்பதனுலேயே சிங்களவராக மாறிவிடப்போகிருேமா என்று அரசாங்கத்தை எதிர்பார்க்கும் நிலை மாறவேண்டும். அரசாங்கத்தின் சலுகைகள் பெற்று அபிவிருத்தியடைய காலம் கடந்துவிடும். நம் கையே நமக்கு உதவி என்பதனை உணர்ந்து ஆடம்பரச் செலவுகள், வேண்டாத பழக்கங்கள் ஆகியவற்றை விட்டொழிக்கவேண்டும்.

அரசியலும் தமிழும் சின்னுபின்னப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளன. அரசாங்கத்தின் முடிவால் திருப்தியடையும் அடிமை மனப்பான்மை நம்மிடமிருந்து அகலவேண்டும்.

### உரிமையே வேண்டும்

எமக்கு இப்போது சலுகைகள் வேண்டியதில்லை. அரசியல் சாஸனத்தில் தமிழுக்குரிய உரிமை வேண்டும். வெளிநாட்டு நடைமுறை பழக்கவழக்கங்கள் நம்மிடையே ஊறியுள்ளன. எதற்கெடுத்தாலும் பிறநாட்டிலிருந்து இரவல் வாங்குகின்ற பிச்சைக்கார புத்தி நம்மிடமிருக்கின்றது. இந்த தாழ்வு மனப்பான்மையை அகற்றி தமிழை வளமுள்ளதாக்க நாம் முயலவேண்டும். தமிழராகப் பிறந்ததற்காக பலர் வெட்கப்படுகிருர்கள். அவர்கள் தமிழின் சிறப்பு, பெருமை என்பனவற்றை உணராதவர்கள். மகாத்மா காந்தியடிகள் மறுபிறப்பு ஒன்று உண்டானுல் தமிழனுகப் பிறக்கவேண்டும் என்று விரும்பினுர். இங்கு ஈழமணித் திருநாட்டில் தமிழனுகப் பிறந்ததற்கு வெட்கப்படுகிருர்கள், பிறநாட்டவர்கள் தமிழின் கவர்ச்சி கண்டார்கள்; ஆனுல் நம்மவர்கள் தமிழை ஆராய மறந்துவிடுகிருர்கள்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.